துகள்கள் இராயபுரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் காற்றில் பரவி, பொதுமக்களின் உடல் நலத்தையும், உடைமைகளையும் (வீடு உட்பட) பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்குவதனை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வருடத்தில் சனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் கரையை நோக்கி வீசும் காற்றினால் சென்னைத் துறைமுகத்தில் இரும்புத்தாது கையாளப்படும்போது தூசு பரவுகின்றது. இதை தடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் எடுத்து வருகின்றது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரும்புத் தூள்கள், தொகுதியிலே பல பகுதிகளிலே பரவுவதால், பொது மக்கள் இருதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகையினால் அந்த இரும்புத் தூள்களை இறக்குமதி செய்யப்படும் இடத்தை மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் அரசு கலந்து பேச ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது ஏற்படக் கூடிய கெடுதலைத் தடுக்கின்ற வகையில் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப் பாட்டு வாரியத்தோடு கலந்தாலோசிக்கப்பட்டு, தூசு பரவாமல் தடுப்பதற்குத் தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தைப் போல, வட சென்னையில் அனல் மின்சார நிலையத்தின் நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னை துறைமுகத்தை எண்ணூர் வரையில் விரிவாக்கும் திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படலாம். அப்படி நிறைவேற்றப்படுகின்றபொழுது, இந்தப் பணி அந்தப் பகுதிக்கு மாற்றப்படும் பொழுது நிச்சயமாக இந்த இரும்புத் தாது மற்றும் கற்களைக் கையாளப்படுவதில் தூசு பரவாமல் இருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

பேருந்துகளில் இலவசப் பயணம்.

10311—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை தொழிலாளர்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

9-20 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவைத தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபோது 1970 ஆம் ஆண்டு என்னுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை தொழிலாளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய இலவச பாஸ், அலுவல் பயண அட்டையை அப்போது போக்கு வரத்துத் துறை அமைச்சராக இப்போது சட்ட அமைச்சராக இருக்கும் அவர்கள் வழங்கினார்கள். 1978 ஆம் ஆண்டு ஒரு சாராருக்குச் சலுகை குறைத்தும், மறு சாராருக்கு அறவே இல்லாமலும் செய்துவிட்டார்கள். எனவே கலைஞர் அவர் களாலே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையினருடைய ஒரு அங்கமாகத் தான் இந்தத் துறையும் இருந்து வந்தது. அதற்குப் பிறகு, போக்குவரத்துத் துறை, போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு இது தனித் துறையாகக் கருதப்படுகின்றது. ஆகவேதான் அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள்— பாய்ன்ட் டு பாயின்ட்—அவர்கள் வீட்டிலே இருந்து வேலை செய் கின்ற இடங்களுக்குச் சென்று வருகின்ற வகையில், சென்னை நகரத்தில் அத்தகைய பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இது மாநிலம் முழுவதும் இருக்கின்ற தொழிலாளர்களுக்குத் தர வேண்டும் ; அதேபோல சென்னை நகரத்திலேயும் தரவேண்டும் என்ற கோரிக்கையை அங்கு இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஏற்கெனவே அளித்து இருக்கிறார்கள். அது அரசி னுடைய பரிசீலனையில் இருக்கிறது : பரிசீலனை முடிந்த பிறகு முடிவுகள் மேற்கொள்ளலாம்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நமக்குச் சரியான விடை அளித்து இருந்தாலும் கூட மேலும்

1991 சனவரி 23]

மேலும் மிக விரைவில், அது கழகத் தலைவராலே அறிவிக்கப் பட்ட திட்டம் என்ற காரணத்தாலே, அவசியம் ஆவன செய்ய இயலுமா என்பதை மீண்டும் ஒருமுறை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது ஏதோ சென்னை நகரத்திலே மட்டும் இருக்கக்கூடிய பிரச் சினை அல்ல. மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. இதிலே அரசுக்கு எவ்வளவு கூடுதலான செலவாகும் என்பதை யெல்லாம் ஆராய்ந்து பார்த்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. அ. கணேசமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையால் நடத்தப்படுகிற பொறியியல் கல்லூரி, அதுபோல மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிலே பணி புரிகிற தொழிலாளர்களுக்கும் இந்த இலவசப் பயணம் செய் வதற்கு அனுமதியை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது ஏராளமான கட்டத்தில் அது நடந்து கொண்டிருக் கிறது. எல்லாமே இலவசம் என்று சொன்னால் எப்படி பேருந்துக் கழகங்களை நடத்த முடியும் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல.

அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்றுதல்.

* *3369*—**திரு. வி. பி. இராசன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்ற அரசு முயற்சி மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற் போது அரசிடம் இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையத்துக்கு மேற்கே, மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவிக்கு தினமும் சுற்றுலாவுக்கு வருகின்றவர்களும், உல்லாசப் பயணிகளும் சேர்ந்து ஆயிரக்கணக்கானோர் அருவியிலே குளித்துவிட்டு